INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

W ITJPSL.COM
E ITJPSL@GMAIL.COM

EXECUTIVE DIRECTOR:
YASMIN SOOKA

**2017 மே 19**

**இறந்தவர்கள் குற்றம் புரிந்தவர்கள் என எண்பித்தலும் உயிருடன் இருப்பவர்களை அச்சுறுத்தலும்**

**யோஹன்னிஸ்பர்க்:** முள்ளிவாய்க்காலில் சிவில் யுத்தத்தின் பொழுது இறந்தவர்களுடைய பெயர்கள் பொறிக்கப்பட்ட கற்களை செதுக்கி பதித்து அவர்களை நினைவு கூறுவதை தடை செய்தபின் தமிழ் செயற்பாட்டாளர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் பொலீசார் பயமுறுத்தி அச்சுறுத்துவதை உடனடியாக தவிர்த்துக்கொள்ளுவதை இலங்கை அரசாங்கம் உடநடியாக உறுதிப்படுத்த வேண்டும் என உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச செயற்திட்டம் கோருகிறது. பதிக்கப்படவுள்ள நினைவு கற்களை சுற்றி பிரார்த்தனை செய்வதை இரு கிழமைகளுக்கு தடை செய்யும் கட்டளை ஒன்றை முல்லைத்தீவு நீதவான் மன்று புதன் கிழமை பிறப்பித்திருந்தது. மக்களின் அமைதிக்கும் தேசத்தின் பாதுகாப்பிற்கும் நாட்டின் கூறுபடா நிலைக்கும் அச்சுறுத்தல் ஏற்படும் என்ற காரணத்திக்காகவே இத்தடை விதிக்கப்பட்டது. அக் கட்டளைக்கெதிராக மேன்முறையீடு செய்த பொழுது நினைவூட்டல் கற்களில் பொறிக்கப்பட இருந்த பெயர்களுள் LTTE யினரின் முன்னாள் ஆளணியினரின் பெயர்களும் இருக்கலாம் என்பதையிட்டு கரிசனை எழுந்தது எனக்கூறப்பட்டது.
"இறந்தவர் ஒருவருக்காக துயரப்படுவதற்கான உரிமை உலகளாவிய ரீதியில் சகலருக்கும் உரித்தானதாகும். தங்களது பிள்ளைகள் LTTE யின் ஆளணியை சேர்ந்தவராக இருப்பினும் அவர்கள் இறந்தமை தொடர்பில் தாய்மார்களும் தகப்பன்மார்களும் துயருறு வதை தடுக்கமுடியாது. அவ்வகையில் இறந்தவர்கள் LTTE ஆளணியை சேர்ந்தவர்களோ அல்லவோ என இத்தறு வாயில் எமக்கு தெரியாது. துயருறுவதை தடுப்பது தமிழர்கள் இறந்தபின்னும் அவர்கள் குற்றம் புரிந்தவர்கள் என எண்பித்தலுக்கு ஒத்ததாகும். மேலும் இனங்களுக்கிடையில் புரிந்துணர்வு உட்படுத்துவது பற்றி எந்நேரமும் பேசிக்கொண்டிருக்கும் ஒரு நாட்டில் இவ்வாறு செய்வது முற்றிலும் அபத்தமான ஒரு விடயமாகும்." என உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச செயற் திட்டத்தின் பணிப்பாளர் யஸ்மின் சூகா அவர்கள் கூறுகிறார்.

இன்று நினைவுகூறும் கற்கள் தொடர்பில் விபரமறிவதற் கெ ன யேசுவிட் மதகுரு வாகிய பிதா எழில் ராஜேந்திரன் இக்கிழமை இரண்டாவது தடவையாக

பொலீஸ் நிலயத்திற்கு அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டுள்ளார். இம் மதகுருவிற்கு சிங்களம் தெரியாது. அவர் வவுனியா போலீஸ் நிலையதில் விசாரிக்கப்பட்டபின் சிங்களத்தில் எழுதப்பட்ட வாக்கு மூலத்தில் அவரது ஒப்பம் பெறப்பட்டுள்ளது. இந்நடவடிக்கை பொலீஸ் மாஅதி பரின் கட்டளைப்படி எடுக்கப்பட்டது என கூறப்பட்டது. மதகுரு பிதா எழில் அவர்களின் பெற்றோரை பொலிஸார் தொடர்பு கொண்டு பிதாவின் செயற்பாடுகள் தொடர்பில் விசாரித்து அச்சுறுத்த முயன்றுள்ளனர். இறந்தவர்களின் பெயர்பட்டியலை கையளிக்கும்படி பிதா எழிலிடம் மீண்டும் மீண்டும் கோரப்பட்டதுடன் அவர் பயங்கரவாதத்தை ஆதரிப்பவரா எனவும் வினவப்பட்டுள்ளார் .

"இவ்வாறு செய்வது பக்கச்சார்பற்ற விசாரணை நடத்துவதற்கு பதிலாக முறைப்பாடு செய்தவரை அச்சுறுத்த என்பது தெளிவாகும் மதகுரு வின் பெற்றோரிடம் சென்று அவரைப்பற்றி பொலீசார் விசாரிப்பது மனசாட்சிக்கு ஒவ்வாத விடயமாகும் எனவும் இவ்வாறு செய்தது அவருடைய குடும்பத்தினரை அச்சுறுத்துவதன் மூலம் சகல தமிழ் செயற் பாட்டாளர்களையும் அச்சத்திற்குள்ளாக்குவதற்கு என்பது தெளிவு. மேலும் இச்செயற்படு பொலிஸ் மா அதிபரினால் அங்கீகரிக்க பட்டுள்ளது. ஆதலால் இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழுவும் மனித உரிமை உயர் ஸ்தானிகரின் அலுவலகத்திட்கும் இவ்விடயத்தில் தலையிட்டு அச்சுறுத்தலையம் பழிவாங்கும் நடவடிக்கைகளையும் நிறுத்து மாறும் நாம் வேண்டுகிறோம். எது எவ்வாறாயினும் இறந்தவர் ஒருவருக்காக துக்கம் அனுஷ்டிப்பது மனித இயல்பே." என யஸ்மின் சூகா கூறுகிறார் .

INTERNATIONAL
TRUTH
AND JUSTICE
PROJECT